10th March 1959]

Sri A. VEDARATHNAM : இந்த சாயச் சாலைகளுக்கெல்லாம் டை கெமிகல்ஸ்—சாயச் சரக்குகள்—எங்கிருந்து வருகின்றன ? இந்தியச் சாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : சாயத்திலே இன்றைக்குப் பற்றுக் குறை இருக்கிறது. சாயப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு யாராவது முயற்சி எடுத்துக்கொண்டால் சர்க்கார் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யும். அதற்காக ரிசர்ச் செய்ய வேண்டுமென்று கூட பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

Sri K. SATTANATHA KARAYALAR : தனி சாயப் பட்டறை வைத்திருப்பவர்கள் சாயப் பட்டறை மாத்திரம் வைப்பதற்கு லைசன்ஸ் கேட்டுப் பெற்றிருந்தாலும் கூட, அதோடு ஜவுளி வியாபாரமும் வைத்திருப்பதால் தான் அவர்கள் இம்மாதிரி கூட்டுறவு சொஸைட்டிகளை அவர்கள் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்குள்ள சந்தர்ப்பம் கிடைக்கிறது என்ற காரணத்தால், அவர்களுக்கு அந்த லைசன்ஸ் வழங்கப்படாமல் இருக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அம்மாதிரி தகவல் சர்க்காரிடத்தில் இல்லை. இது சம்பந்தமாக எழுதி அனுப்பினால் அது பரிசீலனை செய்யப்படும்.

Sri K. RAMACHANDRAN : கூட்டுறவு முறையில் நெசவாளர்களை அதிகமாகச் சேர்க்கக் கூடிய ஒரு நிலைமை இன்றைக்கு இருப்பதால் கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு இம்மாதிரி டை பாக்டரிகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் வசதி செய்து கொடுக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அதுதான் அராசங்கத்தின் கொள்கை. கூட்டுறவு சொஸைட்டிகள் சாய பாக்டரி வைக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு வேண்டிய உதவி செய்கின்றார்கள்.

Sri G. G. GURUMURTHI : சில கூட்டுறவு சாயத் தொழிற்சாலைகளில் தேவையான எல்லாக் கலரும் போட்டுக் கொடுக்க முடியாது என்று வெளியிலே பேசுகிறார்கள். அது உண்மையா ? அப்படியானால், எல்லாவிதமான சாயங்களும் இந்தத் தொழிற்சாலையில் போடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அம்மாதிரி சாயம் கிடைக்கவில்லை என்று சர்க்காரிடத்திலே இதுவரையிலும் கூட்டுறவு சங்கங்களிலிருந்து புகார் வரவில்லை. ஒருவேளை தனியார் வைத்திருக்கும் பட்டறையிலே அதிகமாக சாயம் கிடைக்கிறது என்ற காரணத்தாலோ அல்லது சிறந்த ரக சாயம் கிடைக்கிறது என்ற காரணத்தாலோ சிலர் அந்த இடத்தில் சாயம் தோய்த்தால், அதனால் நாட்டுக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டு விடாது.

Sri M. D. RAMASAMI : பப்ளிக் ஹெல்த் ஆக்டை திருத்தம் செய்து சிறிய சாயத் தொழிற்சாலைகள் முனிசிபல் லிமிட்டிலே ஏற்படக் கூடிய நிலைமை ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : என்னுடைய சகா அமைச்சரவர்களிடத்தில் இந்தக் கேள்வியைப் போட வேண்டும்.

Linking up of Electricity Schemes of the States of Southern Region

* 666 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to have an inter-State Grid connecting the power stations in Andhra, Mysore, Kerala and Madras States; and

[10th March 1959

(*b*) if so, the advantages of such a system?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir. The question of formation of a Super Grid, linking up the Electricity Systems of the States in the Southern Region comprising Madras, Kerala, Andhra and Mysore States is under the active consideration of the Committee constituted by the Southern Zonal Council for Co-ordinated development of power resources in the Southern Zone and Mysore.

(*b*) Co-ordination between the States in the matter of distribution of powers will result in overall economy and ensure speedy loading-up of stations and thus enable mutual interchange of power between the State Grids wherever needed. By this method, surplus in one region may be utilized in other regions where there is deficit. A common grid will also stand the State systems in good stead in times of emergency.

* 667 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any scheme under the consideration of the Government to link up the Electricity Schemes of Madras with those of Kerala, Andhra and Mysore; and

(*b*) if so, at what stage this proposal stands?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the answer to Question No. 666.

SRI A. A. RASHEED : May I know whether the Inter-State Grid will affect our industries in any way adversely?

THE HON. SRI V. RAMAIAH : Positively not.

SRI K. SATTANATHA KARAYALAR : இப்பொழுது அமையக் கூடிய இண்டர் ஸ்டேட் க்ரிட் மின்சார உற்பத்திக்கு இரண்டு ஸ்டேட்டுகளும் ஒத்துழைக்கக் கூடியது. அண்மையில் இந்த நாலு மாகாணங்களும் ஒத்துழைக்கும் அடிப்படையில் இதை எடுக்கலாமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த ஏற்பாடு வேண்டும் என்று தான் இந்த க்ரிட் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த மாகாணங்களில் எவ்வளவு உற்பத்தியானாலும் மற்ற மாகாணங்களுக்கு அதைக் கொண்டு உதவி செய்யக் கூடிய முறையில் அந்த க்ரிட் அமையும்.

SRI A. A. RASHEED : By having an Inter-State Grid, is there any possibility of reducing the tariff rates on electricity?

THE HON. SRI V. RAMAIAH : This question does not arise out of the main question.

SRI K. VINAYAKAM : Whereas we have advanced considerably in the matter of production and distribution of electricity especially to villages in our State, will this common Grid be advantageous or disadvantageous to our State?